ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2337/10 - 2023 ජූනි මස 21 වැනි බදාදා - 2023.06.21
2337/10 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 10/ 2015*

***(351 ஆம் அத்தியாயமான)* குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்**

*(351 ஆம் அத்தியாயமான)* குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ், பொதுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, மாச்சு 30.*

**ஒழுங்குவிதிகள்**

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1956, பெப்புருவரி 24 ஆந் திகதிய 10,896 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானிக்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்ட 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அதன் ஒழுங்குவிதி 10அ இனை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதன் ஒழுங்குவிதி 13அ வில் -

(1) பந்தி (3) இன் உபபந்திகள் (i), (ii) மற்றும் (iii) இனை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுக :-

"(i) மிகைத்து தங்கியிருந்த காலப்பகுதி ஏழு நாட்களை (07) விஞ்சியுள்ளதுடன் மூல விசாவின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவுற்ற திகதியிலிருந்து கணக்கிடப்பட்ட பதினான்கு (14) நாட்கள் வரை தொடர்ந்திருந்துள்ளவிடத்து, இருநூற்றி ஐம்பது (250) அமெரிக்க டொலர்கள் ஏற்புடையதான விசாக் கட்டணத்துக்கு மேலதிகமான தண்டப்பணமொன்றாக அறவிடப்படும் ; அத்துடன்

(ii) *மிகைத்து தங்கியிருந்த காலப்பகுதி பதினான்கு நாட்களை (14) விஞ்சியுள்ளதுடன் மூல விசாவின் செல்லுபடியான காலப்பகுதி முடிவுற்ற திகதியிலிருந்து கணக்கிடப்பட்டுள்ளவிடத்து, ஐந்நூறு (500) அமெரிக்க டொலர்கள் ஏற்புடையதான விசாக் கட்டணத்துக்கு மேலதிகமான தண்டப்பணமொன்றாக அறவிடப்படும்*" ;

*(2) அதன் (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்* -

"*(3அ) பந்தி (3) இன் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், மூல விசாவின் செல்லுபடியான காலப்பகுதி முடிவுற்ற திகதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஏழு (7) நாட்களினுள் இலங்கையிலிருந்து வெளியேறுகின்றவரான ஆளொருவர், ஏதேனும் தண்டப்பணத்தைச் செலுத்தாது புறப்படும் துறையில் ஏற்புடையதான விசாக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறலாம்.*" ; *அத்துடன்*

*(3) மூன்றாம் பந்தியை உடனடுத்துக் காணப்படுகின்ற (2) ஆம் பந்தியை அதன் பந்தி (4) என மீள் இலக்கமிடுவதன் மூலமும்.*

EOG 06-0155

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*